Registered as a Newspaper in Sri Lanka

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர்: 31

இதழ்: 1

புரட்டாதி

1975

## இந்த இதழில்....

- ஆசிரியர் தலையங்கம்
- துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றுக்குதல்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்
- தென்கிழக்காசியாவில் பெண்களின் கூட்டுறவுச் செயற்பாடுகள்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்
- கூட்டுறவு அங்கத்துவ கல்வி
- கூட்டுறவுத்துறையில் உழைப்போர் ஆதிக்க

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 31 | யாழ்ப்பாணம், புரட்டாதி 1975 | இதழ் 1


## தடைநீக்கம் வரவேற்கவேண்டியதே

இதுவரை அரிசியும், நெல்லும் அனுமதிச் சீட்டின்றி ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக்கொண்டு செல்லப்படுவது தடை செய்யப் பட்டிருந்ததினால் பாவனையாளரும், உற்பத்தியாளரும் பாதிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது இத்தடையை நீக்குவதென்ற அரசாங்கத்தின் முடிவு இவ்விரு சாராருக்கும் பெரும் ஆறுதலை அளிக்கும் என்பது திண்ணம். இதனைப் பொது மக்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தடை நடைமுறையில் இருந்த காலத்தில் நடந்ததென்ன?

உண்மை கசப்பானதென்பார்கள். ஆனால் அதற்காக நாம் உண்மையை மூடி மறைக்க முடியாது. ஒரு பகுதியிலே அரிசி குறைந்த விலையிலே கிடைக்கக் கூடியதாக இருந்த அதே காலத்தில் இன்னொரு பகுதியிலே, குறிப்பாக நெல்லுற்பத்தி செய்யப் படாத பகுதிகளிலே அரிசியின் விலை வானை எட்டியது. வெள்ளைச் சந்தை கறுப்புச் சந்தையாக மாறியது. பெரும் முதலாளிகள் அரிசியைப் பதுக்கி செயற்கையான தட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர். தடை முகாம்கள் நிறுவப்பட்டதன் விளைவாக பாவனையாளர்கள் மட்டுமல்ல, உண்மையான உற்பத்தியாளரும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஏனெனில், தமது உற்பத்தியை பதுக்கற்காரருக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதன் விளைவாக நெல்லுற்பத்தியில் அக்கறை காட்டுவது அதிகம் பயனளிக்காது என்ற எண்ணம் உற்பத்தியாளரிடம் தலைதூக்கியமை வியப்பன்று.

நெற் கொள்வனவுச் சபையின் நெற் கொள்வனவுப் புள்ளி விபரங்களை நாம் நோக்குவோமாயின் மேற்படி கூற்றின் உண்மை புலப்படும். படிப்படியாக அதன் கொள்வனவு குன்றிக் கொண்டே வந்திருக்கின்றது. கால நிலைச்சீர்கேடுகள் நெல்லுற்பத்தி குன்றுவதற்கு ஒரு காரணமாய் இருந்தன என்பது உண்மை

யே. எனினும், வேறு காரணிகளும் இந்நிலைக்கு வழிகோலின. விவசாயிகள்மீது குறிப்பாக நெல் பயிரிடுவோர் மீது தொடுக்கப்பட்ட பாணங்களும், அவர்கள் குறித்து கடைப்பிடிக்கப்பட்ட கெடுபிடிகளுமே நெல்லுற்பத்தி குறைந்தமைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். உற்சாகம் இழந்தவன் அல்லது உற்சாகத்தை இழக்கும்படி செய்யப்பட்டவன் உணவுப் போர்க்களத்தில் முழுமனதோடு குதிப்பான் என்று எதிர்பார்ப்பது பேதைமையே.

இன்றாவது ஆட்சியாளர் உண்மையை உணர்ந்துவிட்டனர் என்பது மகிழ்ச்சி தரக்கூடியதாகும். தடைமுகாம்கள் இருந்த காலத்தில் பதுக்கற்காரப்பெருச்சாளிகளும் பயிரினைமேய்ந்த வேலிகளான சில அதிகாரிகளுமே நன்மையடைந்தனர் என்பதனை நன்கு உணர்ந்துவிட்ட ஆட்சியாளர், இன்று முகாம்களை அகற்றி உற்பத்தியாளருக்கும், பாவனையாளருக்கும் உதவுவதற்கு உத்தேசித்துள்ளமை பாராட்டிற்குரியதே.

படுதோல்வியில் முடிந்த இத்தடை முயற்சிகளிலிருந்து நாம் நல்ல படிப்பினையைப் படித்துக் கொள்ள வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பார்கள். இத்தகைய ஏட்டுச் சுரைக்காய் கல்வியிலேதோய்ந்த அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை ஆட்சியாளர் இனியாவது உணர்தல் வேண்டும்

இந்த அதிகாரிகள் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நேரடியாகப்பார்க்கவில்லை. செல்லரித்துப் போன கோட்பாடுகளைப் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கும் இவர்கள், பொதுமக்களுக்கு நன்மைபயக்கும் எவ்வித ஆலோசனை வழங்குவதற்கும் வகையற்றவர்களாவர்.

பழைய சமூக அமைப்பும், அது உருவாக்கியிருக்கும் உளப்பாங்கும் முற்றாக மாற்றியமைக்கப்படும் வரை இத்தகையதடைகளும், நடவடிக்கைகளும் தோல்வியுறுவது திண்ணம் என்பது பாவம் இவ்வதிகாரிகளுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

(முற்றொடர்)

# துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றாக்குதல்

— ஹான்ஸ் மெலிசெக்

### ஒன்றாக்குதல் திட்டங்களைச் செயற்படுத்துதல் திட்டமிடலும் முன் ஆயத்தங்களும்

ஒன்றாக்குதல் திட்டத்தினை வகுப்பதென்றால் சில நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். அவ்விதிகள் வேறு விடயங்களுடன் பின்வரும் அம்சங்களையும் உள்ளடக்கும்: பூர்வாங்கத் திட்டத்தையும் இறுதித் திட்டத்தையும் தயாரித்தல்; சம்பந்தப்பட்டவர்களை இத்தயாரிப்பில் ஈடுபடச் செய்தல்; புதிய காணி வரையறுக்கும்போது கையாளப்பட வேண்டிய கொள்கைகளை வகுத்தல். உத்தேச ஒன்றாக்குதல் திட்டத்தினால் ஏற்படக்கூடிய செலவுகளைப் பிரித்தல்; வகுக்கப்பட்ட திட்டங்களைப்பற்றி அக்கறையுள்ளவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் முகமாக பகிரங்க விசாரணை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்; திட்டத்தின் பல்வேறு கூறுகள் பற்றி மேல்முறையீடு செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தல்; ஆட்சேபனைகள் எதுவும் எழுப்பப்படாதவிடத்து அல்லது எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் மீது இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின் திட்டத்திற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் ஒப்புதல் அளித்ததும், ஒன்றாக்குதல் திட்டம் அறுதியாய்விடும்.

தனிப்பட்டவர்களின் காணித் துண்டுகளைவிட ஒன்றாக்குதல் திட்டத்தின் வீச்சு பெரிதாய் இருப்பதனால் இத்தகைய திட்டம் பொதுவாக பிரதேச, தேசீய பொருளாதார திட்டமிடலுடன் இணைக்கப்படுகின்றது. இவ்வாறு இணைக்கும்போது சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் வளர்ச்சிக் கட்டமும் குறிப்பாக, அதன் கைத்தொழில்கள் சமூகநிலை போன்றவையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

ஒன்றாக்குதல் திட்டங்களின் முக்கிய குறைபாடுகளில் ஒன்று அவற்றின் நத்தை வேகமே. கீழ் அமைப்பினை மாற்றி அமைப்பதற்கு விரிவான திட்டமிடலும், ஆயத்தமும் நிறைவேற்று நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. மேலும், இப்பணிகள் குறைந்தது ஒரு முழுச் சமுதாயத்தையாவது தழுவி இருப்பதனால் ஒரு கிராமத்திட்டம் தொடங்கப்பெற்று அது முடிவுறும் வரை ஏறக்குறைய 5—7 ஆண்டுகள் செல்லும். வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒன்றாக்குதல் திட்டங்களின் நடைமுறைகள் சிக்கலாக இருந்தது

னால் சில நாடுகளிலே கூடிய விரைவிலே செயற்படுத்தக்கூடிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்திட்டங்களிலே கீழ் அமைப்பு முழுவதையும் மாற்றி சீர்படுத்தாது தனியாருடைய காணிகளை பரிமாற்றுவதற்கும், சாத்தியமாயின் தனியாருடைய காணிகளைப் பெருப்பிப்பதற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. துண்டாடுதல் குறைக்கப்பட்டு, கமத்திற்கு அண்மையில் காணித்துண்டுகளை வழங்குவதன் மூலம் ஓரளவு நன்மை ஏற்படுகின்றது. இத்தகைய திட்டம் விரைவாகச் செயற்படுத்தக்கூடியது. செலவுகளும் குறைவு. எனினும் இப்பொழுது பல நாடுகளிலே மிக விரிவான ஒன்றாக்குதல் திட்டங்களில்தான் கூடுதலான நிதி செலவிடப்படுகின்றது. கூடுதலான நிலப்பகுதியும் இவ்விரிவான திட்டங்களில் அடங்கியிருக்கின்றன.

வேறு பல நாடுகளிலே திட்டத்தினைத் தற்காலிகமாகச் செயற்படுத்துவதற்கு சில நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. திட்டம் செயற்படுத்தப்படுவது பின்போடப்பட்டால் ஏற்படக்கூடிய தாமதங்களையும் பயிரிடுவதில் ஏற்படக்கூடிய கவனக்குறைவையும் தவிர்ப்பதற்கே இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வானிலிருந்து காணிகளைப் படம் பிடித்தல், மின்மை இயந்திரங்கள், செறிவழுத்தப் பொறிச் சீட்டுமுறை போன்ற நவீன அலுவலக சாதனங்களைப் பயன்படுத்துவதன்மூலம் ஒன்றாக்குதல் திட்டங்களின் செயற்பாட்டை முடுக்கி விடலாம். பொதுவேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு கேள்வி முறை மூலம் ஒப்பந்தகாரரைத் தேர்ந்தெடுத்து அவவேலைகளை அவர்களுக்கு ஒப்படைக்கும் சில நாடுகளிலே ஒன்றாக்குதல் திட்டங்களிலும் இதே அடிப்படையைக் கடைப்பிடிக்கப்படுகின்றது; இதன்மூலம் செயற்பாடு விரைவுபடுத்தப்பட்டு செலவுகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழக்குகள் அடிக்கடி தாக்கல் செய்யப்படுவதன் மூலம் ஒரு திட்டத்தினை நிறைவேற்றுவதற்குத்தடை ஏற்படாவண்ணம் சில குறிப்பிட்ட கட்டங்களில் மட்டும்தான் மேல் முறையீடு செய்யலாம் என சில திட்டங்கள் வரையறுக்கின்றன. எடுத்துக்காட்டாக இக்கட்டங்களாவன: தொடக்கத்திலிருந்து உரிமைகளை வரையறுத்தல், ஆதனங்களை மதிப்பிடுதல், புதிய ஒதுக்கீடுகள், செலவுகளைப் பங்கிடுதல்.

நில அளவீடு, வரிவிதிப்பு சார்ந்த நிலப்படங்களும், காணிப் பதிவுமே ஒன்றாகுதல் திட்டம் ஒவ்வொன்றின் அடிப்படைகளாகும். புடைப்பியல் நிலப்படங்களும், மண்தன்மையைக் காட்டும் நிலப்படங்களும் ஒன்றாகுதல் திட்ட நடைமுறைகளை இலகுபடுத்துவதுடன் குறிப்பாக காணிப்பெறுமதியை மதிப்பிடுவதற்கு பெரிதும் உதவுகின்றன. நீரைப்பேணுதல், நீர் வினியோகம் மண்ணைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒன்றாக்குதல் திட்டங்களுக்கு அதிக விபரங்களைக் கொண்ட நிலப்படங்கள் தேவைப்படுகின்றன. இந்நிலப்படங்களின் அளவுப்படி நிரை



1:1000யிலிருந்து 1:2500 வரை இருத்தல் விரும்பத்தகுந்தது. ஒரு திட்டத்திலே எல்லா நிலப்பட வரைதல் முயற்சிகளுக்கும் ஒரே அடிப்படை நிலப் படங்களைப் பயன்படுத்துவது உசிதமாகும்.

## நிருவாகம்

ஒன்றாக்குதல் திட்டங்களின் மூலம் காணிகள் கைமாறுவதினால் பொருத்தமான நிருவாக ஒழுங்குகளையும், சம்பந்தப்பட்டவர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டி, தமது நோக்கங்களைப் பாதுகாப்பதற்கு உகந்த ஒரு நடைமுறையையும் உருவாக்குவது இன்றியமையாதது. ஒன்றாக்குதல் திட்டங்களின் வெற்றி அத்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த பொறுப்பாகவுள்ள நிறுவனங்களிலும், வெவ்வேறு குழு நலங்களுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள மன்றுகளிலும் பெரிதளவு தங்கியீருக்கின்றது.

ஒன்றாக்குதலுக்குப் பொறுப்பாகவுள்ள நிருவாக உறுப்புக்கள் எவ்வாறு அமைக்கப்படல் வேண்டும். அவற்றின் பங்கும் அதிகாரங்களும் என்ன என்பது ஒவ்வொரு நாட்டின் நிலைமைக்கேற்ப வேறுபடும். பொதுவாக ஒன்றாக்குதல் திட்டங்கள் ஓரளவு மத்திய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பிரதேச பொது மன்றங்களால் செயற்படுத்தப்படுகின்றன. அல்லது அத்திட்டத்தின் நிருவாகமே உள்ளூர் சபைகளின் ஒத்துழைப்புடன் இப்பணியினை மேற்கொள்கின்றது.

சில நாடுகளிலே பொருத்தமான சட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பும், பிணக்குகளைத் தீர்க்கும் பணிகளும் ஒரே அதிகாரக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சில நாடுகளிலே நிருவாகச் செய்கடமைகளும் சட்ட அதிகாரமும் வேறாக்கப்பட்டுள்ளன.

பல நாடுகளிலே விசேட ஒன்றாக்குதல் ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. பொதுவாக, இவை உள்ளூர் மட்டத்திலேயே நிறுவப்படுகின்றன. எனினும், மாகாண அல்லது மத்திய ஆணைக் குழுக்களும் சில இடங்களில் உள்ளன.

காணிகள் ஒன்றாக்கப்படுவதற்கு முன்னர் வெவ்வேறு காணி அபிவிருத்தி வேலைகள் வெவ்வேறு நிறுவனங்களின் பொறுப்பிலிருந்தன. ஒன்றாக்குதல் திட்டம் செயற்படத் தொடங்கியதும், இப்பல்வேறு நிறுவனங்களிடையே நெருங்கிய ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. எல்லா அபிவிருத்தி வேலைகளையும், காணி ஒன்றாக்குதல் அதிகாரக்குழுவிடம் கைமாற்றுவதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகச் சுமுகமான வழி எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பங்குபற்றும் பல்வேறு குழு நலங்களையும் பாதுகாப்பது மிக முக்கியமான ஒன்றாகும். அப்பொழுதுதான் அவைகள் நம்பிக்கையோடும் பயன் முனைப்பான முறையிலும் இத்திட்டத்தில் பங்குபற்றும். இந்நோக்கத்தினை எய்தும் பொருட்டு [illegible]த்தியஸ்தத்திற்கு

போதிய சட்ட ஒழுங்குகள் செய்து கொடுப்பது அனுகூலமானது. சில நாடுகளிலே நீதி மன்றங்களில் விசேட சட்டமன்றப் பிரிவுகள் நிறுவப்பட்டு ஒன்ருக்குதலால் ஏற்படும் காணித் தகராறுகள் அவற்றின் தீர்ப்பிற்கு விடப்படுகின்றன. இதனுல் தீர்வுகள் விரைவுபடுத்தப்படுவதுடன் நீதியும் பயன் முனைப்பான முறையில் செலுத்தப்படுகின்றது.

### காணிகளைச் சுவீகரித்தல்

வெளிச் சந்தையில் காணிகளை ஒழுங்குமுறைப்படி கொள்வனவு .செய்வதற்கும், ஒன்ருக்கப்படவிருக்கும் எல்லாக் காணிகளையும் நிருவகிப்பதற்கும், காணி நிதி ஒன்றினை நிறுவுவது உகந்ததென அனுபவ வாயிலாக உணரப்பட்டுள்ளது. சுவீகரிக்கப்படவிருக்கும் காணிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்டவர்களும் நிதியினரும் பரஸ்பரம் ஏற்றுக்கொண்ட விலையில் காணிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதன்பின்னர், ஒன்ருக்குதல் விதிகளுக்கேற்ப காணி பிரிக்கப்படுகின்றது. எடுத்துக் காட்டாக திருவுளச் சீட்டுமூலம் இது நடைபெறலாம். வரிச் சலுகைகளை வழங்குவதன் மூலமும், வேறு நிதி சார்ந்த நன்மைகளை வழங்குவதன் மூலமும், சில நாடுகளிலே பரஸ்பர உடன்பாடுமூலம் ஆதனங்கள் பரிமாறப்படுவது ஊக்குவிக்கப்படுகின்றது. அத்துடன் வேறு வகையான உடமைப் பரிமாற்று முறைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சிறு காணிச் சொந்தக்காரர் தன் விருப்பார்ந்த முறையில் காணிகளைக் கையளித்தால் அவர்களுக்கு பண இழப்பு எதிர்காப்பு வழங்கப்படுகின்றது. உத்தியோக நிறுவனங்கள் நேரடியாகக்காணியைக் கொள்வனவு செய்கின்றன. மேலும், அரசாங்க காணிகள் மாற்ருகக் கொடுக்கப்படுகின்றன, நிலமின்மை மிக மோசமாக உள்ள நாடுகளிலே தன் விருப்பார்ந்த முறையில் காணிகள் பெருமளவில் வழங்கப்படும் என எதிர்பார்க்க முடியாது. எனினும், சில சூழ்நிலைகளில் இத்தகைய சுவீகரிப்பு வெற்றியளித்துள்ளது. எடுத்துக்காட்டாக பின் உருத்தாளிகள் இல்லாத, விவசாயிகளைப் பொறுத்த வரையிலும், பண்ணையில் குடியிருக்காத நிலக்கிழார்களைப் பொறுத்த வரையிலும், ஒன்ருக்குதல் திட்டங்களுக்கு வேண்டிய காணிகளைப் பெறும்பொருட்டு சில நாடுகளிலே பொதுக் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன தேவைப்பட்ட காணிகளைத் தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்வது சாத்தியமில்லாதவிடத்து அல்லது போதியதாக இல்லாதவிடத்து சில நாடுகளிலே சொத்துரிமையைப் பறிமுதல் செய்வதற்கு ஏற்பாடு உண்டு.

(முற்றும்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு முகாமைச் சேவை நிலையத்தினுல் தயாரிக்கப்பட்ட
வெளியீட்டின் தமிழாக்கம்

அறிமுகம் :

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் மிகவும் பரந்துபட்டது. நாளுக்கு நாள் அதன் முக்கியத்துவம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இன்றைய ஐந்தாண்டுத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு சமூக பொருளாதார மாற்றங்களை எய்துவதற்கும் அரசாங்கம் பெருமளவில் கூட்டுறவு அமைப்புக்களையே நம்பியிருக்கின்றது.

பின்வரும் முக்கிய துறைகளிலே கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க பங்கினைச் செலுத்தி வருகின்றன :

(அ) நுகர்ச்சிப் பொருள் வியாபாரம்.

(ஆ) கால்நடை அபிவிருத்தி உட்பட விவசாய அபிவிருத்தித் துறை.

(இ) விளைபொருள்களைச் சந்தைப்படுத்துதலும், பதனிடுதலும்

(ஈ) கூட்டுறவு கடற்ரெழில் சங்கங்களை அபிவிருத்தி செய்தல்.

(உ) கிராமிய வங்கித்துறையை அபிவிருத்தி செய்தல்.

(ஊ) சிறு இடைப்பட்ட கைத்தொழில்களை குறிப்பாக புடவை, சிறு பொறியியல், விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.

நாளாந்த அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி இலங்கையிலே பங்கீட்டு அடிப்படையிலே பாவனையாளருக்கு வழங்கப்படுகின்றன. இப்பொருள்களையும், வேறு தட்டுப்பாட்டுப் பொருள்களையும் சமமான முறையில் விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகம் முக்கிய பங்கினைச் செலுத்துகின்றன. இலங்கையின் குடிசனத் தொகை 1350 லட்சம். இதில் ஏறக்குறைய 1150 இலட்சம்

பேருக்கு (85 வீதம்) கூட்டுறவுச் சங்கங்களே நேரடியாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குகின்றன. அரிசி, மா, சீனி ஆகியவற்றைப் பொறுத்தவரை மொத்த வியாபாரம் முழுவதும் சில்லறை வியாபாரத்தின் பெரும் பகுதியும் கூட்டுறவுச் சங்கங்களின் கைவசமே இருக்கின்றன.

இந்நாட்டு மக்களின் பிரதான உணவு அரிசியே. நீண்டகாலமாக இங்கு உண்ணப்பட்டுவந்த அரிசியில் 40, 50 வீதம் இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளது. நெல்லுற்பத்தியில் தன்னிறைவு காணும் இயக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு மிக முக்கியமாகும். கமக்காரருக்குத் தேவைப்படும் நிதியுதவிகளும், வேறு உதவிகளும் சங்கங்களால் வழங்கப்படுகின்றன.

நெல்லுற்பத்தி செய்யும் 9 லட்சம் கமக்காரர்களில் 80 வீதத்திற்கு மேல் கடன் வசதிகளுக்கும், வேறு வசதிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

1973/74 பெரும் போகத்தில் நெல்லுற்பத்திக்கென கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை 8 கோடி 60 லட்சத்துக்கு மேலாகும். நெல்லுற்பத்திக்காக நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் இது 94·9வீதம். உரம், கிருமிநாசினி, களை கொல்லிகள் போன்ற விவசாய இடுபொருள்களையும் கூட்டுறவுச் சங்கங்களே வழங்குகின்றன. 1973/74 பெரும்போகத்தில் நெல்லுற்பத்தியாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 82,685 தொன் நெல் உரத்தினை வழங்கின. நெல் உர மானிய திட்டத்தின்கீழ் அரசாங்கம் வழங்கிய முழுத் தொகைதான் இது.

நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு — நெல்லே கமக்காரர் விளைவிக்கும் முக்கிய பயிராகும். நெல் சந்தைப்படுத்துதல் சபை கூட்டுறவுச் சங்கங்களையே பயன்படுத்துகின்றது. ஏறக்குறைய ஆண்டுதோறும் 2½ கோடி புசல் நெல் (அதாவது ஏறக்குறைய 350 ஆயிரம் தொண் அரிசிக்குச் சமம்) கூட்டுறவுச் சங்கங்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதில் 10,15 வீதத்தை சங்கங்களே ஆலைகளில் குத்துவிக்



கின்றன. மேட்டு நிலத்திற்குகந்த உப உணவுப் பயிர்களாகிய மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றையும், தேயிலை, தென்னை, றப்பர் போன்றவற்றையும் பயிரிடுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் கமக்காரருக்கு உதவுகின்றன.

இலங்கைக் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் சம்மேளனம் இலங்கை றப்பர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஆகிய உச்ச தேசிய கூட்டுறவு நிறுவனங்களின் உதவியுடன் ப.நோ. கூ. சங்கங்கள் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துகின்றன.

கடற்றொழில் அபிவிருத்தியைப் பொறுத்தவரை சங்கங்கள் கடற்றொழில் திணைக்களத்துடனும், மீன்பிடி கூட்டுத்தாபனத்துடனும் நெருங்கிய தொடர்புகள் கொண்டு செயலாற்றுகின்றன. தொழிற்சாதனங்களை நவீனப் படுத்துவதிலும், தொழில் முறைகளை அபிவிருத்தி செய்வதிலும் கடற்றொழிலாளருக்கு உதவுவதில் சங்கங்கள் இப்பொழுது ஈடுபட்டுள்ளன. இப்பணியில் 41 பெரிய சங்கங்கள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளன.

உறுப்பினர்களிடையேயும், உறுப்பினர்கள் அல்லாதோரிடையேயும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவதில் கூட்டுறவுச் சங்கங்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன. இவ்விடயத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் வங்கியுடன் மிக நெருக்கமாக இணைந்து செயலாற்றி பல இடங்களில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை நிறுவியுள்ளன. ப. நோ. கூ. சங்கங்களின் விசேட துறைகளாக 360 கூட்டுறவு கிராமிய வங்கிகள் இந்நாட்டில் செயற்பட்டுவருகின்றன. இலங்கையிலே செயற்பட்டுவரும் ஏறக்குறைய 80 வகைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடனுவுதவு சங்கங்களே (மட்டுப்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்படாத சங்கங்கள் உட்பட) எண்ணிக்கையில் அதிகமானவை.

சிறுகைத்தொழில் துறையிலே குறிப்பாகப் புடவை உற்பத்தியிலே கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. தச்சுத் தொழில், மட்பாண்டப் பொருள்களை வனைதல், கொல்லர் தொழில், கன்

ணரத் தொழில், சிறு பொறியியல் போன்ற துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எண்பதிற்கு மேற்பட்ட சிறு பொறியியற் கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. இறக்குமதிப் பொருள்களுக்கு பதில் பொருள்களை உற்பத்தி செய்தல் என்ற கொள்கையைச் செயற்படுத்துவதில் இச்சங்கங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

வேலையற்றவர்களினதும், போதிய வேலையற்றிருப்பவர்களினதும் தொகை 8 லட்சம். வேலை வாய்ப்புக்களையும், கல்வியையும் பொருத்தியமைக்கும் முகமாக கல்விமுறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சுயவேலையாற்றுதலுக்கே இப்பொழுது அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி கல்வி கற்ற இளைஞர்கள் கல்வி மூலம் தாம் பெற்ற திறமைகளைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தி, தேசிய உற்பத்தியை அதிகரிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றனர். வருங்காலத்திட்டங்களில் கூட்டுறவு அமைப்பிற்கே விசேட கவனம் செலுத்தப்படும். இப்புதிய தேவையை நிறைவேற்றும் பொருட்டு பாடசாலைக் கூட்டுறவு இயக்கத்திற்கும் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் இரண்டாம் மட்டப் பாடசாலைகளில் 6 ந் தரத்திலிருந்து சமூகவியல் பாடவிதானத்தில் கூட்டுறவு ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பத்தாம், பதினொராம் தரத்தில் இப்பாடத்திற்கு மேலும் கூடுதலான அழுத்தம் கொடுக்கப்படும்.

கூட்டுறவு ஒரு தனிப் பாட நெறியாகக் கருதப்பட்டு கொழும்பு, வித்தியோதய வளாகங்களில் இப்பாட நெறியைப் பயில்வோர் அபிவிருத்தி, ஆய்வியல் பட்டத்தினைப் பெறலாம். இருபத்திரண்டு மாணவர்களைக் கொண்டு கடந்த ஆண்டு ஒக்டோபர் 4 ம் திகதி இப்பாட நெறி தொடங்கப்பட்டது. அபிவிருத்தியைச் சார்ந்த பாட நெறிகளைப் பயிலும் ஏனைய பல்கலைக் கழக மாணவர்களும் கூட்டுறவை ஒரு பாடமாகக் கற்கலாம்.

மேற்கத்திய நாடுகளின் அமைப்பைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாது, வளர்ச்

(தொடர்ச்சி 16 ம் பக்கம்)

(முற்றொடர்)

# தென்கிழக்காசியாவில் பெண்களின் கூட்டுறவுச் செயற்பாடுகள்

ம. அ. பிரகாசராசா

19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனா சோஷலிசவாதியான சார்ல்ஸ் பூரியர், ''எந்தவொரு சமுதாயத்தின் விடுதலையையும் அந்த சமுதாயத்தில் பெண் குலத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் விடுதலை மூலம் தான் கணிப்பிட முடியுமென்று கூறினார். உலகில் இலங்கை ஒரு பெண்மணியை முதலாவதாகப் பிரதமராக கொண்டிருப்பதால் இங்குள்ள பெண்கள் அனைவரும் சுதந்திரமாக ஒடுக்கப்படாமல் வாழ்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரமுடியாது. உத்தியோகம் பாராமல் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு சமுதாய பிரிவுகளின் மூலம் வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. இவர்களைத்தவிர, குடும்ப வாழ்வில் ஈடுபட்டுத் தொழில் புரியும் பெண்களும் உள்ளனர். இவர்களை நான்கு வகைப்படுத்தலாம்:

1. பொதுத்துறை தனியார் துறைகளில் கடமை புரிபவர்கள்.
2. தோட்டத்துறையில் தொழில் புரிபவர்கள்.
3. விவசாயத்தில் ஈடுபட்டவர்கள்.
4. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள்

### பொதுத்துறை தனியார்துறை

கல்வி, மருத்துவம், நீதிபரிபாலனத்துறை நிருவாக சேவை, முகாமைச் சேவை முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ள மத்தியதர வகுப்பிலுள்ள பெண்களுக்கு ஆண்களைப் போலவே சம சம்பளமும் ஏனைய சலுகைகளும் வழங்கப்படுகின்றன

### தோட்டத்துறை

தோட்டத்துறையில் மூன்று லட்சம் பெண்கள் தொழில் புரிகின்றார்கள். பயிற்சியற்ற பெரும் தொழி

லாகக் கருதப்படும் கொழுந்து பறிக்கும் தொழிலில் 93 வீதமானோர் பெண்களே ஈடுபட்டுள்ளார்கள். சம சம்பளமுறை இங்கு கிடையாது. சராசரி ஒரு தோட்டப் பெண் மாதச் சம்பளமாக 90 ரூபாய் பெறுகிறாள். மற்றத் துறைகளிலும் பார்க்க தோட்டப் பெண்களே அதிக நேரம் வேலை செய்கிறார்சள். 8 மணி நேர வேலை முடிந்த பின்னரும், மேற்கொண்டு 1½ மணி நேரம் சம்பளமில்லாமல் உழைத்துக் கொடுக்கிறார்கள். 1969-ம் ஆண்டில் சிசு மரணம் ஆயிரத்துக்கு 52·7 வீதமாக இருந்தபோது தோட்டப்பகுதியில் ஆயிரத்துக்கு 110 ஆக அதிகரித்தது. கல்வித்துறையில் 51·8 வீதமாக அறியாமை இருளில் மூழ்கடிக்கப்படுகிறார்கள்.

தோட்டப் பெண்களின் நிலைபற்றி ஆராய்ந்த திரு. பாலசூரியா அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார். இவர்கள்தான் அகில உலகத்திலேயே முழு மோசமாகச் சுரண்டப்பட்ட பெண்கள் கூட்டமாகும். தித்திப்பான ஒரு கிண்ணம் தேநீர் அவர்களாலானது. இலங்கையின் மேல்வட்ட வர்க்கம் இவர்களால் வாழ்கின்றது. புரூக் பொண்ட், லிப்டன் போன்ற சர்வதேச வியாபாரக் கம்பெனிகள் ஒரு நூற்றாண்டிற்கு மேலாக இம்மக்களைச் சுரண்டியதன் காரணமாக மதிப்பிட முடியாத செல்வத்தைச் சேர்த்துக்கொண்டன இலங்கையின் மொத்த வெளிநாட்டு வருமானம் 2 கோடி ரூபாவில் 1½ கோடி ரூபாவை சம்பாதித்துக் கொடுக்கும் இந்நாட்டின் அரைவாசி உழைப்புச் சக்தியை நல்குபவர்கள்தோட்டப் பெண்களாகும்' அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த வெளிநாட்டு தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டிருப்பதானால்இவர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

**விவசாயம் :**

கிராமப் புறங்களிலுள்ள காணி நிலமற்ற ஏழை விவசாய குடும்பப் பெண்கள் வயல்களில் ஆண்களுடன், ஆனால் பாரம்பரியமாக அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நாற்று நடுதல், களை பிடுங்குதல், தூற்றுதல், அறுவடை செய்தல் போன்ற வேலைகளை செய்து வருகிறார்கள். பெண்கள் 'சுத்தமற்றவர்கள்' என்ற பழமையான நம்பிக்கையினால் உழுதல், விதைத்தல், சூடு அடித்தல் போன்ற பிரிவான வேலைகளில் இருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள் இவர்களின் ஊதியம் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது வேலையின் தேவைக்கும், அவ்வப் பகுதி வழக்கிலுள்ள விகிதாசாரப்படியும் மதிய போசனம் உட்பட ரூபா 3/50-ல் இருந்து ரூபா 5/- வரை நாளாந்த ஊதியமாக கொடுக்கப்படுகிறது. தெங்கு, மிளகாய், காய்கறி, வாசனைத் திரவிய செய்கையாகிய மேட்டுநில விவசாயச் செய்கையில் ஈடுபடும் பெண்களுக்கு ஆண்களைவிட மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது.

**தொழிற்சாலைகள்**

அரசுடமை தொழிலகங்களைவிட தனியார்களுக்கு சொந்தமான ஜவுளி உற்பத்தி தாபனங்களிலும் உடை தயாரிப்பு நிலையங்களிலும், தேயிலை பதன்படுத்துமிடங்களிலும், றப்பர் ஆரம்ப தயாரிப்பு சாலைகளிலும், தும்பு தொழிற்சாலைகளிலும், பீடி, சிகரெற் தயாரிக்குமிடங்களிலும், பிஸ்கற், சொக்கலேற், இனிப்பு பண்டங்கள் செய்யும் தொழிலகங்களிலும், தீப்பெட்டி, பாதஅணிகள், செங்கல், ஓடு, விளையாட்டுப் பொருட்கள் சவர்க்காரம் செய்யும் தொழிற் சாலைகளிலும், பெரும் தொகையான பயிற்சியற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மிகக் குறைந்த ஊதியம் பெறுவதுடன் பொதுத் துறையில் பணிபுரியும் பெண்கள் அனுபவித்து வரும் ஓய்வு போன்ற ஏனைய வசதிகளும் மறுக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுத்துறை**

துணி உற்பத்தி, பாய் முடைதல், கயிறு திரித்தல், கூடை பின்னுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட 700 பெண்கள் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் 200க்கு குறையாத மகளிர் கூட்டுறவு சிக்கன சேமிப்புச் சங்கமும் 1964/65-ல் ஸ்ரீலங்காவில் இருந்தன. 1970-ல் ஸ்ரீலங்கா கூட்டுறவு இயக்கம் பற்றி ஆராய்ந்த அரச ஆணைக்குழு தமது அறிக்கையில் கூட்டுறவு இயக்கத்தில் பெண்களுக்கு முக்கியஇடம் அளிக்க வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது. மேலும் ஆணைக்குழு ''மூன்று கூட்டுறவுக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டுமெனவும், இவை நாடு முழுவதற்கும் கூட்டுறவுப் பணியாளரைப் பயிற்றும் நிலையங்களாகவும், விரிவாக்க வேலைகளை

யும், விசேட கல்விச் சேவைகளையும் ஆற்றுவதில் ஈடுபடும்.........பெண்களை கூட்டுறவிலும், சமுதாய சேவைகளிலும் ஈடுபடுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் உதவுவதற்காக கணிசமான தகுதியான பெண்கள் விசாலிப்பு உத்தியோகத்தர்களாக சேவை செய்ய வேண்டும்'' என வற்புறுத்தியுள்ளது.

**மலேசியா :**

மலேசியாவில் அண்மையில் பெண்கள் தமக்கென கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். 1971-ல் 51 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் 17 மகளிர் முதலிட்டு கூட்டுறவுச் சங்கங்களும் (இவ்வற்றில்) முதலீட்டு சங்கங்கள் ஒரு சமாசத்தை ஆக்கியுள்ளன) 27 ப. நோ. கூ. சங்கங்களும், ஒரு கூட்டுறவு வேளாண்மைச் சங்கமும் உள்ளன. நெல்குற்று ஆலைத்தொழில் கோழி வேளாண்மை, பகட்டுவண்ண மல்ர்ச் செடிகள் செய்கை போன்றவற்றில் பெண்கள் ஒன்றிணைந்த வருமானத்தை பெறும்வகையில் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள், கடனுதவு, பாவனை ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது இப்பொழுது கோலாலம்பூரை மையமாகக்கொண்ட சூழவிலே அதிகமான மாதர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்திருக்கின்றன. அண்மையில் கோலாலும்பூர் கூட்டுறவு பேரங்காடி திறந்ததின்பின் மக்களிடையே பாவனையாள் கூட்டுறவில் ஓர் அக்கறை ஏற்பட்டுள்ளது. மலேசிய கூட்டுறவுச் சமாசம் ''கூட்டுறவு முறையில் எவ்விதம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்'' என்ற விடயம் பற்றி ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதற்கு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு தாபனம் உதவி புரிந்துள்ளது.

**பாக்கிஸ்தான்:**

1967/68-ல் 2,731 உறுப்பினரைக் கொண்ட 60 மகளிர் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பாக்கிஸ்தானில் இருந்தன: இச்சங்கங்கள் தையல், பின்னல், வேலைகளில் ஈடுபட்டுள்ளன. இத்துடன்கூட 13,778 உறுப்பினர்களைக் கொண்ட 435 சிக்கன சேமிப்புச் சமகங்களும் செயற்பட்டு வருகின்றன.

**இந்தோனேசியா :**

இந்தோனேசியாவில் உள்ள மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் தொகை 52. இச்சங்கங்களின் உறுப்பினர் பிரதானமாக பாவனைத் தொழில்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

**வங்காளதேஷ் :**

வங்களாதேஷின் பெண்கள் அண்மையில் தங்களுக்கென பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்துள்ளார்கள். சங்கங்களின் விபரம் :- ஆரம்ப சங்கங்கள் 400; இரண்டாம் மட்டத்திலுள்ள மத்திய சங்கங்கள் 4; தேசிய மட்ட சங்கம் 1. இ கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான களஞ்சிய சாலைகள் இல்லாதபடியால் தட்டுப்பாடான சாமான்களை கூட்டுறவு சந்தைப்படுத்தும் சங்கங்களிலிருந்தோ அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்தோ நேரடியாகப் பெற்று உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கின்றன. இதனால் அடிக்கடி உறுப்பினர்கள் சந்தை விலையிலும் பார்க்க அ ரவாசி விலைக்கே பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்யும் சலுகையை அனுபவித்து வருகிறார்கள். சில மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ப. நோ. கூ. சங்க நோக்கில் சணல் சாக்குகளை தயாரிப்பதிலும் ஏனைய சணல் பொருட்கள் உற்பத்திகளையும், தையல் வேலை, பின்னல் வேலை, பாவை செய்தல் போன்ற கருமங்களை செய்து வருகின்றன. இச்சங்கங்கள் தங்களின் செயற்பாடுகளை ஏனைய துறைகளுக்கும் விசாலிக்க திட்டமிட்டுள்ளன.

**கோரியக் குடியரசு :**

இந்நாட்டில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில்லை. ஆனால் பண்ணைப் பெண்கள் எல்லாம் விவசாய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றிணைந்த உறுப்பினர் 196[illegible]-ல் 18,[illegible]45 விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் 1,767,[illegible]00 பெண்களை ஒன்றிணைந்த உறுப்பினராக கொண்டிருந்தது. கோரிய நாட்டுப் பெண்கள் சிக்கன சேமிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு அதன்மூலம் கிராமக்களின் வாழ்க்கைமுறைகளைத் திருத்த பணிபுரிகிறார்கள்.

**அனைத்துலக கூட்டுறவு இணைப்புத் தாபனம்**

முடிவாக குடும்பப் பெண்கள் ஒன்றிணைந்த வருமானம் பெறும் தேவையை உணர்ந்ததினால் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் மேலே குறிப்பிட்ட வகையான மகளிர் கூட்டுறவு

## கூட்டுறவுப் பணியாளர் சகாய நிதிச் சங்கம்

வடபிரதேசத்திலுள்ள கூட்டுறவுப் பணியாளர்கள் சகாய நிதிச் சங்கமொன்றினை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ளனர்.

இது குறித்து பணியாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இன்றைய சமுதாயத்துடன் கூட்டுறவுப் பணியாளர்கள் இரண்டறக் கலந்திருப்பதினால் எம்மவர்களுக்கு கஷ்டம் ஏதும் ஏற்படும் போது நாம் ஓய்வு பெற்றதும் எமக்கு உதவக்கூடிய ஒரு சங்கத்தினை நிறுவுவது இன்றியமையாதது. இதற்கான திட்டத்தினை வகுப்பதற்கு சங்க விதிகளை வரைவதற்கும் மேல்மட்ட பணியாளர்கள் தலைப்படுவது அத்தியாவசியம்.

இவ்விடயத்தினை ஆராயும் பொருட்டு ஆரம்பக் கூட்டமொன்று விரைவில் நடைபெறும். இச்சங்கத்திற்கு நிதி தேவைப்படுவதனால் சங்கங்கள் நிதியுதவி வழங்க முன்வர வேண்டுமென கூட்ட அமைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

இளைஞர் மத்தியிலே, குறிப்பாக பாடசாலை மாணவரிடையே கூட்டுறவுத் தத்துவங்களையும் நடைமுறைகளையும் பரப்பும் நோக்குடன் கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவற்றில் ஒன்று பாடசாலைகளிலே கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதாகும். இவ்வாறு யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவிலே பின்வரும் பாடசாலைகளில் சங்கங்கள் அண்மையில் பதிவு செய்யப்பட்டன.

ஏழாலை மகா வித்தியாலயக் கூட்டுறவுச் சங்கம், வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், நடேஸ்வரா கல்லூரி கூட்டுறவுச் சங்கம், உஸ்மானியா கல்லூரி கூட்டுறவுச் சங்கம்.



### தொழிற்படு மு

| சங்கத்தின் வகை | முற்றாகச் செலுத்தப்பட்ட பங்கு முதல் ஒதுக்கீடுகள் முன் கொண்டு செல்லப் பட்ட ஆதாயம் | | உறுப்பி மி |
|---|---|---|---|
| | 1948 | 1957 | 1948 |
| மட்டுப்படுத்தப்படாத கடனுதவு சங்கங்கள் | 1,860·8 (45·1) | 4,774·6 (42·5) | 1,457·6 (35·3 |
| பண்டசாலைச் சங்கங்கள் | 10,471·1 (66·7) | 16,852·6 (80·2) | 1,620·1 (10·3 |
| உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் | 923·5 (18·4) | 19,141·9 (34·1) | 313·6 (6·2) |
| கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் மட்டும் | — | 11,607·8 (32·0) | — |

★ கூட்டுற

புலப்படும். 1957 அளவில் உயர்ந்தது. புள்ளிவிபரங்
இச்சங்கங்கள் இரண்டாம் கள் வருமாறு :

## தொழிற்படு முதலின் அமைப்பு (ஆயிரம் ரூபாவில்)

| சங்கத்தின் வகை | முற்றுகச்செலுத்தப்பட்ட பங்கு முதல் ஒதுக்கீடுகள் முன் கொண்டு செல்லப் பட்ட ஆதாயம் | | உறுப்பினர்களிட மிருந்து | | கூட்டுறவுச் சங்கங்களிட மிருந்து ★ | | அரசாங்கத்திட மிருந்து | | ஏனையவரிட மிருந்து | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1948 | 1957 | 1948 | 1957 | 1948 | 1957 | 1948 | 1957 | 1948 | 1957 | 1948 | 1957 |
| மட்டுப்படுத்தப்படாத கடனுதவு சங்கங்கள் | 1,860·8 (45·1) | 4,774·6 (42·5) | 1,457·6 (35·3) | 2,543·2 (22·6) | 745·3 (18·0) | 3,558·7 (31·7) | 60·6 (1·5) | 1·1 — | — | 366·4 (3·2) | 4,124·3 (100) | 11,243·0 (100) |
| பண்டசாலைச் சங்கங்கள் | 10,471·1 (66·7) | 16,852·6 (80·2) | 1,620·1 (10·3) | 944·5 (4·5) | 461·8 (3·0) | 496·2 (2·3) | 1,547·8 (9·8) | 37·8 (0·2) | 1,612·6 (10·2) | 2,689·3 (12·8) | 1,5713·4 (100) | 2,1020·4 (100) |
| உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் | 923·5 (18·4) | 19,141·9 (34·1) | 313·6 (6·2) | 1,407·0 (2·5) | 708·9 (14·3) | 6,507·1 (11·6) | 3,023·6 (60·2) | 24,782·0 (44·1) | 50·9 (1·0) | 4,218·9 (7·6) | 5,018·5 (100) | 5,6056·9 (100) |
| கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் மட்டும் | — | 11,607·8 (32·0) | — | 215·8 (0·6) | — | 733·9 (2·0) | — | 2,2171·0 (61·1) | — | 1,572·8 (4·3) | — | 3,6302·3 (100) |

★ கூட்டுறவு வங்கிகள் உட்பட

தங்கயிருந்தன என்பது புலப்படும். 1957 அளவில் இச்சங்கங்கள் இரண்டாம் அளவில் இவ்வீதம் 34.1 ஆக உயர்ந்தது. புள்ளிவிபரங் கள் வருமாறு:

1948ல் மட்டுப்படுத்தப் படாத 1837 கடனுதவு சங்கங்களும் 3887 பண்டசாலைச் சங்கங்களும் ஆக 193 சந்தைப்படுத்துதல் உற்பத்திச் சங்கங்கள் மட்டுமே இருந்தன. இந்த 193 சங்கங்களில் 47 மட்டுமே விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள். இந்த 47 சங்கங்களின் கூட்டு மொத்த விற்பனவு 550 லட்சம் ரூபாய் இதற்கு மாறாக 193 சங்கங்களும் கூட்டாக எடுக்கப் படின் கூட்டு மொத்த விற்பனை 900 லட்சமாகும்.

1957ல் மட்டுப்படுத்தப் படாத கடனுதவு சங்கங்களும், 2569 பண்டசாலைச் சங்கங்களும், 2126 சந்தைப் படுத்துதல் உற்பத்திச் சங்கங்களும் இருந்தன. கடைசியாகக் குறிப்பிடப்பட்ட வகைச் சங்கத்தில் 995 சங்கங்கள் விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்களாகும்.

மேலும் தரப்பட்டுள்ள புள்ளி விபரங்களிலிருந்து மட்டுப்படுத்தப்படாத கடனுதவு சங்கங்கள் தமது பங்கு முதலிலும், ஒதுக்கீடுகளிலும் உறுப்பினர்களது வைப்புப் பணங்களிலுமே தங்கியிருந்தன என்பது புலப்படும். 1957 அளவில் இச்சங்கங்கள் இரண்டாம் மட்ட கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கூடுதலாக நிதி பெறத் தொடங்கின. இச் சங்கங்கள் அரசாங்க நிதியில் தங்கியிருக்கவில்லை.

1947 க்கும் 1957 க்குமிடையில் பண்டசாலைச் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வந்த போதிலும் அவை தமது சொந்தக் கால்களிலேயே நிற்கப் பழகத் தொடங்கின. 1957 அளவில் அவற்றின் தொழிற்படு முதலில் 80 வீதத்திற்கு மேல் முற்றாகச் செலுத்தப்பட்ட பங்கு முதலும். ஒதுக்கீடுகளும், முன்கொண்டு செல்லப்பட்ட ஆதாயத்தையும் உள்ளடக்கியிருந்தது. பத்து ஆண்டுகளில் அவை அரசாங்க நிதியில் தங்கவேண்டிய நிர்ப்பந்தம் அற்றுப் போய்விட்டது.

சந்தைப்படுத்துதல் உற்பத்திச் சங்கங்களைப் பொறுத்தவரை நிலைமை சற்று வேறுபட்டது. 1948ல் தொழிற்படு முதலில் 18·4 வீதம் செலுத்தப்பட்ட பங்கு முதலையும், ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கியிருந்தது. 1957 அளவில் இவ்வீதம் 34.1 ஆக உயர்ந்தது. புள்ளிவிபரங்கள் வருமாறு :

## கடன் வழங்கீடு அமைப்பு

| உற்பத்தி | மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய சங்கங்கள் 1947—48 தொகை | தொகை வீதம் | 1957 தொகை | தொகை வீதம் | மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய சங்கங்கள் 1947—48 தொகை | தொகை வீதம் | 1957 தொகை | தொகை வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கமத்தொழில் ... | 2,003 | 47·6 | 5,554 | 62·5 | 102 | 10·3 | 169 | 8·5 |
| கால்நடை கொள்வனவு | 197 | 4·7 | 142 | 2·1 | 10 | 1·0 | 22 | 1·1 |
| காணி வாங்குதல் ... | 81 | 1·9 | 118 | 1·3 | 53 | 5·4 | 40 | 2·0 |
| காணியைத் திருத்தல் / குத்தகைக்கு எடுத்தல் | 291 | 6·9 | 622 | 7·0 | 26 | 2·7 | 86 | 4·3 |
| வியாபாரம் ... | 978 | 23·2 | 1,200 | 13·5 | 489 | 49·5 | 569 | 28·6 |
| வீடுகள் கட்டல் ... | 129 | 3·1 | 343 | 3·9 | 82 | 8·4 | 135 | 6·8 |
| வண்டிகள் வாங்கல் ... | 60 | 1·4 | 77 | 0·9 | 9 | 0·9 | 11 | 0·5 |
| உணவு வாங்கல் ... | 57 | 1·4 | 53 | 0·6 | 9 | 1·0 | 11 | 0·5 |
| மருத்துவ உதவி ... | 27 | 0·6 | 42 | 0·5 | 21 | 2·1 | 114 | 5·7 |
| ஏனைய ... | 222 | 5·3 | 422 | 4·8 | 54 | 9·5 | 162 | 8·2 |
| மொத்தம் ... | 4,046 | 96·1 | 8,623 | 97·1 | 888 | 90·8 | 1,319 | 66·2 |
| **உற்பத்தி அல்லாத** | | | | | | | | |
| பழைய கடன்கள் கொடுத்தல் ... | 126 | 3·0 | 205 | 2·3 | 51 | 5·2 | 231 | 11·6 |
| சடங்கு ... | 10 | 0·2 | 11 | 0·1 | 25 | 2·6 | 101 | 5·1 |
| ஏனைய ... | 27 | 0·7 | 41 | 0·5 | 14 | 1·4 | 341 | 17·1 |
| மொத்தம் ... | 164 | 3·9 | 257 | 2·9 | 91 | 9·2 | 674 | 33·8 |
| கூட்டுமொத்தத்தொகை | 4,210 | 100·0 | 8,880 | 100·0 | 988 | 100·0 | 1,992 | 100·0 |

(வரும்)

# கூட்டுறவு அங்கத்துவ கல்வி

(கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்தினுல் வெளியிடப்பட்டது)

### 1. கூட்டுறவு பற்றிய சுருக்க வரலாறு

இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்னுல் இக்கூட்டுறவுச் சங்கம் கிஸோஸக்கி கிராமத்தின் பழைய ஜப்பான் கைத்தொழில் கூட்டுறவுச் சபைச் சட்டத்தின் (1900) கீழ் பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. அன்று தொடக்கம், இச் சங்கம் விவசாய அங்கத்தவர்களுக்கும் மற்றையோருக்கும் சிறந்த உதவி செய்து வந்துள்ளது. தற்போது இச்சங்கம் ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகக் கருமம் ஆற்றி வருகிறது. இது நாட்டின் புதிய விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் (1947) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜப்பானிய விவசாய கூட்டுறவு இயக்கத்தின் மரபுப்படி இச்சங்கம் சிறிது சிறிதாக ஒன்று சேரவில்லை. எனினும் ஜப்பானிய விரிகுடாவிலுள்ள பண்படுத்தப்பட்ட காணிகளை விவசாயிகள் திரும்பவும் பெறுவதில் உதவி செய்து சேவைபுரியும் இடத்தையும் வெற்றிகரமாக விஸ்தரித்துள்ளது. காணிகளை விநியோகம் செய்யும் உள்ளூர் கிராமக் குழுவில் விவசாய அங்கத்தவர்களின் சார்பில் இச்சங்கத் தலைவர்/முகாமையாளர் (முகாமை இயக்குநர்) பணியாற்றுவர். மேலும், கிஸோஸக்கி கிராமத்தின் அருகில் காணி பண்படுத்தப்படும் திட்டமொன்றை ஜப்பானிய மத்திய அரசாங்கம் மேற்கொண்டதுடன் விவசாய அபிவிருத்திக்காக காணிகளை விவசாயிகளுக்கு மாற்றம் செய்துகொண்டும் வருகிறது.

### 2. தற்போதைய நிலை

கிஸோ நதியின் கழிமுகத்தெதிர் நிலத்திலுள்ள சுமார் 1. சதுர கிலோ மீட்டர் பரப்பில் இச்சங்கம் தற்போது அமைந்துள்ளது. இங்குள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய விளைபொருட்கள் நெல், தக்காளி, பச்சை மிளகு, வெள்ளரிப்பழம்,

கெக்கரிக்காய் ஆகியனவேயாகும். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மொத்த நெற்காணி 526 ஹெக்டெயர்ஸும், (நெல் இல்லாத) 51 ஹெக்டெர்ஸுமாகும். அதிகமான நிலம் நெற் செய்கைக்கு உபயோகிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படும் உதவியினால் காய்கறி உற்பத்தியும் கால்நடைகளும் பெருகிவருகின்றன.

அங்கத்தவர்களினால் ஏறக்குறைய 20,000 கோழிக்குஞ்சுகளும், 50 பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன.

3 பொருளாதார வர்த்தகம்

உள்ளூர் கூட்டுறவுச் சங்கங்களினால் முட்டைகளும், காய்கறிகளும் அங்கத்தவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு கையோற்றோ, நகோயா, ஓசாக்கா நகரங்களிலுள்ள சந்தைகளில் விற்கப்படுகின்றன. ஓர் உள்ளூர் விவசாய குடும்பத்தினால் சந்தைப்படுத்தப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களின் வருடாந்த சராசரி பெறுமதி 1,500,000 யென்களாகும். இது பெரியதொரு வருமானமாகும்.

இரண்டு நிதி வருடங்களின் கூட்டுறவுச் சங்க வர்த்தகப் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு கூட்டுறவுச் சங்கங்களின் நிதி வருடம் பெப்ரவரி 1ம் திகதி தொடங்கி அடுத்த ஆண்டு ஜனவரி 31 ம் திகதி முடிவடைகிறது.

அட்டவணை இல. 1

கிஸோஸக்கி விவசாய கூட்டுறவுச் சங்கத்தின் பெறுபேறுகள்

(யூனிட் ஆயிரம் யென்)

| முயற்சிகள் | | நிதிவருடம் 1971–72 | நிதிவருடம் 1972–73 | அங்கத்துவ வீடுகள்படி |
|---|---|---|---|---|
| வைப்புகள் அங்கத்தவரின் சேமிப்பு (மீதி) | தேவை | 183,825 | 302,239 | 464 |
| | நேர வைப்பு | 782,720 | 952,301 | 1,555 |
| | பகுதி மொத்தம் | 966,545 | 1,254,540 | 2,119 |
| கடன்கள் (மீதி) | குறைந்த தவணை | 73,969 | 77,095 | 144 |
| | நடுத்தர/நீண்ட கால தவணை | 284,434 | 363,788 | 619 |
| | பகுதி மொத்தம் | 358,403 | 440,883 | 763 |
| நடைமுறை கடன்கள் (மீதி) | நடைமுறை நிதி | 31,048 | 32,586 | 61 |
| | வசதி நிதி | 33,312 | 60,934 | 90 |
| | பகுதி மொத்தம் | 64,360 | 93,520 | 151 |
| சந்தைப் படுத்தல் மொத்தம் | அரிசி கோதுமை | 155,167 | 185,894 | 325 |
| | ஏனையவை | 286,617 | 313,186 | 572 |
| | பகுதி மொத்தம் | 441-794 | 499-098 | 897 |
| வழங்கல் (மொத்தம்) | உற்பத்திப் பொருட்கள் | 180,649 | 179,434 | 343 |
| | உணவுப் பொருட்கள் | 72,580 | 78,369 | 144 |
| | பகுதி மொத்தம் | 253,229 | 257,803 | 487 |
| நடைமுறையிலுள்ள காப்புறுதி ஒப்பந்தம் | | 1,976-810 | 2,661-260 | 4,426 |
| உபயோகப்படுத்தலும் பதனிடப் படலும் | | 3,679 | 3,921 | 7 |



வைப்புப் பணத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் அதிக முன்னேற்றம் பெற்றிருப்பதை இதன் மூலம் காணக்கூடியதாயிருக்கின்றது. ஆனால் உற்பத்திப் பொருட்கள் வழங்குவதில் ஒரே நிலையிலேயே செயலாற்றி வருகிறது. மேலும் உள்ளீடு வழங்கல், நுகர்வோன் வழங்கல், கடன், வைப்பு ஆகியன

வற்றில் அங்கத்தவர்கள் ஈடுபடும் கொடுக்கல் வாங்கலின்படி கூட்டுறவுச் சங்கம் லாபங்களை விநியோகம் செய்து வருவதையும் நாம் காணக்கூடியதாயிருக்கின்றது.

**அங்கத்துவம்**

சங்கத்தில் **பின்வருமாறு அங்கத்தவர்கள் இருக்கின்றனர்.**

(1) வழக்கமான அங்கத்தவர்கள்/
விவசாயிகள் 442 (434வீடுகள்)

(2) உதவி அங்கத்தவர்கள்
(ஏனையோர்) 98 (90வீடுகள்)

540 (524வீடுகள்)

அந்த இடத்திலுள்ள எல்லா விவசாயக் குடும்பங்களும், விவசாய மல்லாத குடும்பங்களும் சங்கத்தில் அங்கத்தவர்களாயிருக்கின்றனர். அதிகமாக வழக்கமான அங்கத்தவர்கள் பகுதிநேர விவசாயிகளாயிருக்கின்றனர். 122, அதாவது, 28.1%வீதமான விவசாயக் குடும்பங்கள் மாத்திரமே தமது முழு நேரத்தையும் விவசாயத்தில் செலவழிக்கின்றன.

பகுதிநேர விவசாயிகள் பின்வரும் பிரிவுகளில் அடங்கியுள்ளனர் :

(1) பிரிவு–1 (207 விவசாயக் குடும்பங்கள் 47.7%) விவசாயம் அதாவது கோழி, பன்றி வளர்ப்பு உட்பட, 50%மும் அதற்கதிகமான வருமானம் உள்ளவர்கள்.

(2) பிரிவு–2 (105 விவசாயக் குடும்பங்கள் 242%) விவசாயத்தில் 50% உட்பட்ட வருமானம் உள்ளவர்கள்.




**5. சங்கத்தின் நிறுவ அமைப்பும் கடமைகளும்**

கூட்டுறவுச் சங்கத் துணைச் சட்டத்தின்படி அதன் பொதுச்சபை வருடத்தில் குறைந்தது ஒரு தடவையாவது கூடுகிறது. அங்கத்தவர்கள் 21 பணிப்பாளர்கள் கொண்ட சபையையும், 5 உள்ளூர் கணக்காளர்களையும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கின்றனர். அடிக்கடி கூடும் பணிப்பாளர் சபையானது முகாமைப் பணிப்பாளர் உட்பட மற்றும் உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுக்கின்றது. (இங்கே, சங்கத் தலைவரே முகாமைப் பணிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்). இது கருமமாற்றும் இடம் சிறிதானபடியால், ஒரு கிளை அலுவலகத்தையும் இது இன்றுவரையமைக்கவில்லை. இச்சங்கத்தின் கீழ் 26 குக் கிராமங்கள் அடங்கியுள்ளன. கீழே தரப்பட்டுள்ள நிறுவப்படம், கூட்டுறவு அமைப்பினை மக்கள் பாகத்தையும், உள் அமைப்பைப் பற்றியும் நன்கு தெளிவாக்குகின்றது.

நிறுவனம்பற்றிய குறிப்பு

பிரிவுகள் தொடர்புகொள்ளும் ஆளணி

அங்கத்தவர்களும் அவர்களது குடும்பங்களும்



**கடமைகள்**
(பிரிவுகள்)

நிருவாகம்

கணக்குப்பார்த்தல், மேற்பார்வை, கல்வி திட்டமிடல், பிரசித்தம், தொலைபேசி—ஒலிபரப்பு.

வங்கிமுறை

வைப்பு, கடன், காப்புறுதி.

உற்பத்திப் பொருட்கள் வழங்கல்

உற்பத்திப் பொருட்கள் வழங்கல், யந்திரம், உபகரணங்கள் ஆகியன.

விவசாய முகாமை

தொழில் நுட்ப வழிகாட்டல், சந்தைப்படுத்தல், உபயோகம்

சிறந்த வாழ்க்கைத்தரம்

தினசரி தேவைகள் வழங்கல், கூட்டுறவு முதல்தர சந்தை, சிறந்த வாழ்க்கைக்குதவியான வழிகாட்டி.

போக்குவரத்து

பொருட்கள் கொண்டு செல்லப்படல்

இதைப் பார்க்கும்போது, இக்கூட்டுறவுச் சங்கத்தில் பலதரப்பட்ட அதிகாரிகளோ, பிரிவுகளோ இல்லை என்பதை அறியக் கூடியதாய் இருக்கின்றது. எனவே, தலைவர், முகாமைப்பணிப்பாளர் மட்டுமே தொழிலாளருடனும், அங்கத்தவர்களுடனும் நேரடியான தொடர்பை வைத்துக் கொள்வர்.

5.1 தொழிலாளர் :

முழுநேர முகாமைப் பணிப்பாளரைவிட, இதில் 34 தொழிலாளரும் கடமையாற்றுகின்றனர். இதில் அநேகம்பேர் அலுவலக தொழிலாளராயிருக்கின்றனர். மேலும், இச்சங்கத்தில் இரு விவசாய வழி காட்டி ஆலோசகர்களும், சிறந்த வாழ்க்கைபற்றி ஆலோசனை செய்பவர் ஒருவரும் இருக்கின்றார்கள். இவர்கள் தூண்டுதலில்லாத தலைவர்கள், தொழிலாளர்களின் உதவியுடன் அடிக்கடி விவசாயிகளைச் சந்தித்து, கல்வித் திட்டங்களை வகுத்து வருகின்றனர். விவசாய முகாமைப் பிரிவைச் சேர்ந்த விவசாய வழிகாட்டி ஆலோசகர்களும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பிரிவைச் சேர்ந்த ஆலோசகர்களும் மாத்திரமே அங்கத்தவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் முக்கிய ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர். அத்துடன் சங்கத்துடனும் நீண்ட காலத் தொடர்பு கொண்ட பணிப்பாளர்களும், பிரிவுத் தலைவர்களும் அங்கத்தவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வருகின்றனர். இவர்களின் மதிப்பீட்டுப்படியே, வர்த்தக அபிவிருத்தித் திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

5.2 வெளிப்புற வசதிகள்

கூட்டங்கள் கூடுவதற்கான வசதிகளையுடைய இடத்தைச் சொந்தமாக வைத்துள்ளது இச்சங்கம். இதனால் அங்கத்தவர்கள் யாவரும் அடிக்கடி கூடி தமது அனுபவத்தையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளக் கூடியதாயிருக்கின்றது.

கிராமத்தில் சிறு குழுக்களின் கூட்டங்களை நடாத்தக் கூடிய வசதிகளைக் கொண்ட இடமுண்டு. விவசாய பொருட்கள் குழுக்கள், கூட்டுறவுப் பெண்கள் குழுக்கள் ஆகியன அடிக்கடி கூடக் கூடியதாயிருக்கின்றன.

6. அங்கத்தவர்களுடன் தொடர்புகொள்ளும் முறை

அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ளும், பொருட்டு கூட்டுறவுச் சங்கம், பல்வேறுவழி முறைகளையும் கையாண்டு வருகிறது. பலவிதமான கடமைகளைச் செய்வதுடன் பொருளாதார, சமுதாய, கலாசார, கல்வி சம்பந்தமான பல சேவைகளையும் கூட்டுறவுச் சங்கம் செய்து வருகிறது. அங்கத்தவர்களின் வீடுகளின் அவ்வப்போதைய தேவைகளுக்கான மருந்து வசதிகளையும் இச்சங்கம் வழங்கி வருகின்றது. சாதாரண சேவைகளுடன் கீழே தரப்பட்ட சேவைகளையும் இது அங்கத்தவர்களுக்கு அளித்து வருகின்றது.

(1) அங்கத்தவர்களுடன் சம்பிரதாயப்படியல்லாத தொடர்பு
(2) வர்த்தக தொடர்பு
(3) விவசாய பொருள் குழு மற்றும் குழுக்கள்
(4) கூட்டுறவு மகளிர் குழுக்கள்

(5) கல்வி பயில உற்சாக மூட்டல்

(6) கூடை விநியோக முறை

(7) தொலைபேசி, ஒலி பரப்பு முறை

(8) பிரசித்தப்படுத்தலும், படம் காட்டும் துணைக் கருவிகளும்

(9) அங்கத்தவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் தேவையான கல்வி கலாசார சேவைகள்

**6.1 அங்கத்தவர்களுடன் சம்பிரதாயப்படியல்லாத தொடர்பு**

சங்கத்தோடு தலைவர் முகாமையாளரும் வளர்ச்சி பெற்றுள்ளார். அங்கத்துவ விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளார் இவர். உண்மையில் சங்கத்தில் முழுநேர வேலை செய்யும் முகாமையாளரான இவர், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரேயாவர். கூட்டுறவு வர்த்தகத்திற்கு இத்தொடர்பு அவசியமானதாகும். அங்கத்தவர்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதற்கெனப் பெருந் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை தலைவர், முகாமையாளர் ஆகிய இருவரின் தலைமையில் நல்லபடியாக நிறைவேறும் என அங்கத்தவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

**6.2 வர்த்தகத் தொடர்பு**

கூட்டுறவு ஊழியர்கள் விசேடமாக பிரிவுத் தலைவர்கள் அன்றாடம் அங்கத்தவர்களுடனும் அவர்களது குடும்பங்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கின்றனர். இதன் தகவல்களின் அடிப்படையிலேயே அபிவிருத்திக்கான வர்த்தகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. பின்னர் பிரதேச கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் மூலம் அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வர்த்தக அபிவிருத்திக்கான திட்டங்களை அமைப்பதற்கான ஆலோசனைகளைப் பணிப்பாளர் சபைக்கு வழங்குவதற்கென விசேட குழுக்கள் அமைக்கப்படுகின்றன. சங்கத்தின் அலுவலகத்தில் அங்கத்தவர்கள், பிரதிநிதிகளுக்கான கூட்டங்கள் குறித்த காலங்களிலும் நடாத்தப்படுகின்றன.



**6.3 விவசாயிகள் விளைபொருள் குழுக்களும் விசேட குழுக்களும்**

பல்வேறுவிதமான விளைபொருட்களைப் பொறுத்து விவசாய அங்கத்தவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர். பிரதம குழுக்கள் பின்வருமாறு:

பிளாஸ்டிக் பச்சை வீட்டுக்குழு — 103 அங்கத்தவர்கள்

கண்ணாடிப் பச்சை வீட்டுக்குழு — 23 அங்கத்தவர்கள்

கோழிப்பண்ணை (மட்டை) குழு — 15 அங்கத்தவர்கள்

விளைபொருட் குழுக்கள் வசதியான இடங்களில் கூட்டப்படுகின்றன. உதாரணமாக கிராமத்திலுள்ள சமூக நிலையங்கள். பொதுவாக இவர்கள் தமது தலைவரின் தலைமையில் மாதமொருமுறை சந்திக்கின்றனர். இத் தலைவரே குழு அங்கத்தவர்களுக்கும் சங்கத்திற்குமிடையில் தொடர்பு ஏற்படுத்துபவராயிருக்கின்றார். இவரே தனது குழுவின் பிரதிநிதியாக மாதமொருமுறை நடைபெறும் சங்கக் கூட்டங்களிலும் கலந்துகொள்கிறார்.

இரு விவசாய வழிகாட்டி ஆலோசகர்களும், விவசாய முகாமைப் பிரிவின் தலைவரும் உள்ளூர் சங்க அளவில் நடைபெறும் விளைபொருள் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.

குழுக்கள் அமைக்கும் திட்டங்களில் உதவி செய்து, அதன் யோசனைகளையும் பின்பற்றி வருகிறது இச்சங்கம். குறிப்பிடப்பட்ட அறிவூட்டும் தகவல்களை அச்சடித்து அவற்றை அங்கத்தவர்களுக்கு விநியோகித்தும் வருகிறது. அடிப்படைத் தகைமைகளையும் பெற்று குழுவின் விதிகளைப் பின்பற்றுவோர் மாத்திரமே குழுக் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது பச்சைக் கண்ணாடி வீடு மிகவும் பிரபலமாகி வருகிறது. கண்ணாடி வீடுகளில் விளையும் தக்காளி மற்றும் காய்கறி வகைகளைச் சேகரித்து அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான விசேட ஒழுங்குகளைச் செய்துள்ளது இங்

சங்கம். விவசாயத்தை நவீன முறையில் அபிவிருத்தி செய்வோருக்கு விசேட உதவியை ஜப்பானிய மத்திய அரசாங்கமும் நல்கி வருகிறது.

### 6.4 கூட்டுறவு மகளிர் குழுக்கள்

பெண்களுடன் இளங் குடும்பப் பெண்களும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக விசேட திட்டங்களை வகுத்துள்ளது இச்சங்கம். கிராமத்திலுள்ள எல்லாக் குடும்பப் பெண்களையும் சந்தித்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரிவுத் தலைவி பெரும் பாராட்டைப் பெறுகின்றார். குக்கிராமங்களில் சுமார் 500 அங்கத்தவர்கள் இருக்கின்றனர்.

ஒரு குக்கிராமத்தில் ஏறக்குறைய 10,15 விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இப்படியான குக்கிராமங்கள் 26 உள்ளன. ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒவ்வொரு குழுக்கள் உண்டு. இவை அடிக்கடி தாம் தேர்ந்தெடுத்த தலைவியின் தலைமையில் கூடுகின்றன. சங்கத்திற்கும் அதன் மகளிர் அங்கத்தவர்களுக்குமிடையில் தொடர்பேற்படுத்துவதற்காக இக்குழு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. இவ்வங்கத்தவர்கள் ஒரு வருடத்திற்குக் கடமையாற்ற பெயர்களின் வரிசைப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மகளிர் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சில சமயங்களில் இவர்கள் கலாசார சுற்றுலாக்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவர். கூட்டுறவு செயல்முறைப் படுத்தப்படும் இடத்தில் ஐந்து பிரதேசக் குழுக்கள் கருமமாற்றுகின்றன. குக்கிராம குழுக்களின் பிரதிநிதிகள் பிரதேச ரீதியில் ஒன்றுகூடி, தமது தலைவர்களை நியமிக்கின்றனர். சங்க ரீதியில் கூட்டுறவு மகளிர் குழுக்கள் இருக்கின்றன. இவை பின்வருமாறு அங்கத்தவர்களைக் கொண்டதாயிருக்கும்.

கூட்டுறவு மகளிர் குழுக்களின் பிரதேச தலைவர்கள் – 5

கிஸோஸக்கி விவசாய கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதி (தலைவராக)–1

சங்கத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஆலோசகர்–1 (வளரும்)

# கூட்டுறவுத் துறையில் உழைப்போர் ஆதிக்கம் வேண்டும்

தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன்

இன்று கூட்டுறவியக்கத்தில் மக்களுக்கு முழுமையாக நம்பிக்கை உண்டாகவில்லை. உணவு, கடன் ஆகியவற்றிற்குத் தேவை ஏற்படும்போதுதான் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவை ஏற்படுகிறது. புதியதொரு சமுதாய மாற்றம் ஏற்படுவதற்கு கூட்டுறவு பயன்படும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் வளர வேண்டும். மத்திய மாநில அரசுகள் கூட்டுறவில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளன. அந்தச் சூழ்நிலையை நன்கு பயன் படுத்திக் கொண்டு கூட்டுறவுகள் வளரவேண்டும். ஜனநாயகத்தில் பல குறைகள் இருப்பினும் அதில் நம்பிக்கையுள்ளவர்கள் பணியாற்றினால் வெற்றி பெறமுடியும்.

### அரசியல் ஆதிக்கம்

ஆரம்பகாலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் லட்சாதிபதிகளும் கோடீஸ்வரர்களும் தான் இருந்தனர். அது ஒரு சாபக்கேடு. இன்று கூட்டுறவில் வணிகமுறை வளர வேண்டும் எனக் கருதுகிறோம். அதில் தொடர்புள்ளவர்கள்—பெரிய வணிகர்கள் பணக்காரர்கள் — கூட்டுறவில் சார்ந்துவரப் பார்க்கிறார்கள். ஆற்றல், திறமை படைத்த சாதாரணமானவர்கள் இதில் பணிபுரிவது நல்லதா, அது நல்லதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கு உழைப்பவர்களாயினும், உழைப்பவர்கள் கையில் இத்துறையை ஒப்படைக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும், வணிகத் துறையில், உழைப்பவர்கள் தொடர்பிருந்தால் சமுதாயத்தில் நன்மை ஏற்படும், தனி மனிதர், அரசியல் வாதிகள் ஆதிக்கத்தை விட்டு உழைப்பவர்கள் ஆதிக்கம் இத்துறைக்கு வரவேண்டும்,

### அரசு அதிகாரிகளின் ஆதிக்கம்

கூட்டுறவியக்கம் எல்லோரும் கூடி வாழவேண்டும்-சுரண்டல் வாய்ப்பில்லாமல் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்ததாகும். இன்று கூட்டுறவை அரசு அதிகாரிகளின் ஆதிக்கம் ஆட்டிப் படைக்கிறது. காரணம் நம்மிடையே உள்ள குறைபாடு தான். நம்மிடையே கூட்டும். ஒற்றுமை உணர்வும் இல்லை. அதனால், ஆதிக்கத்திற்கு வழி ஏற்படுகிறது. மக்கள்கஷ்டம் வரும்போது தான் கூட்டுறவைப் பற்றி சிந்தனை செய்கிறார்கள். நாட்டிலுள்ள உணவுப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க கூட்டுறவு முறையில் சிந்தனை செய்யவேண்டும்.

### வழிகாட்டும் தமிழகம்

டில்லியில் நடைபெறும் மாதிரிக் கடைகளில் பணபலம் படைத்த தனி வியாபாரிகளிடம் தான் 90 சதவிகிதம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்த நிலை தமிழகத்தில் இல்லை. சென்ற ஆண்டு தான் தனியாரிடமிருந்த கடைகளைப் பிடுங்கி பொதுத்துறையில் நாம் ஒப்படைத்தோம். டில்லியில் சில கடைகள் மட்டுமே கூட்டுறவில் நடந்தன. தமிழகத்தைப் பொறுத்தவரை எல்லாம் சிறப்பாக இயங்குகின்றன. மாதிரிக் கடைகளைத் துணிந்து கூட்டுறவுத் துறையில் வைக்க வேண்டும். அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்கு கூட்டுறவு மூலம் வழங்க வேண்டும். கூட்டுறவுத் துறை அனைத்தும் உழைக்கும் வர்க்கத்தினர் ஆதிக்கத்துக்கு வந்தாலன்றி நாட்டில் சமூக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லை.

மக்களுக்கு முக்கியப் பொருள்களை முறையாக வழங்கவேண்டுமானால் அது கூட்டுறவுத்துறை மூலம் தான் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த 'மாதிரிக்கடைகள்' திட்டம் தோல்வியடையும்.

தனிப்பட்ட முதலாளி தன்னிடம் முதல் இருப்பதால்வாணிபம் செய்கிறான். உழைப்பாளர்களால் நடத்தப்படும் கூட்டுறவுசங்கங்களுக்கு அரசு வட்டியில்லாமல் கடனுதவி செய்ய வேண்டும். அதற்கு சிறப்பாக கூட்டுறவு முறையில் திட்டமிடவேண்டும்.

(வளரும்)

## வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

**நாடகம், நடனம்**

| | |
|---|---|
| இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் .. . | 200-00 |

**இசை நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| இரவு .. .. | 175-00 |
| பகல் .. .. | 150-00 |

**ஏனைய நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |

**திருமணம் - பகல் அல்லது இரவு**

| | |
|---|---|
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |

**சினிமா**

| | |
|---|---|
| இரவு | 150-00 |
| பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்பட வேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி:
7388



Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd